# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2055/31 - 2018 ජනවාරි මස 24 වැනි බදාදා - 2018.01.24

*2055/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், ஜீஎல் 24 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கரன்டி) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2016, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 1955/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, இதற்கான அட்டவணையின் I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “ பொருட்கள் பொறியியலில் தத்துவவியல் கலாநிதி” என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர் இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**அட்டவணை** I

நிபந்தனைகள்

ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கரன்டி) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மாணவர்களைச் சேர்க்கும் போது-

(அ) வியாபார நிர்வாகத்தில் முதுமாணி தொடர்பில், இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமனத்தில் (SLQF) விதித்துரைக்கப்பட்டவாறு பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :-

(i) இயைபான பாடத்துறையில் 30 கற்கைநெறி அலகின் பெறுமதிசார் பெறுபேற்றுச் சித்திகளுடன் (கிரடிட்ஸ்) இளமாணிப் பட்டமொன்று; அல்லது

(ii) இயைபான கற்கைத் துறையில் (SLQF) மட்டம் 6 அல்லது அதற்கு மேலான தகைமை ஒன்று ; அத்துடன், தகைமையின் பெயர் எவரேனும் தகைமையாளர் (அல்லது விசேடத்துறை) அதனோடு இணைக்கப்பட்டதாக கொண்டிருத்தலாகாது என்ற நிபந்தனைக்கும் அமைந்தொழுகுதல் வேண்டும்;

(ஆ) பௌதீக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி தொடர்பில், க.பொ. த. (உயர் தரப் பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் மற்றும் கணிதம் போன்ற பாடங்களிலிருந்து மூன்று (03) "S" சித்திகள் அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| வியாபார நிர்வாகத்தில் முதுமாணி | எம் பி ஏ |
| பௌதிக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி | பி ஈடி கௌரவ (பௌதிக விஞ்ஞானம்) |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2018, சனவரி 24.

2- 313

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.